[5th September 1960

(ஆ) ஒவ்வொரு வேலேக்கும் முதலில் அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அவைகள் குறைக்கப்பட்டனவா ?

(ஈ) அப்படியானல், அதற்கான காரணங்கள் யாவை ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Under G.O. Ms. No. 640, dated 28th February 1955, fourteen works in Kalasapakkam Block and twenty-one works in Polur Block in North Arcot district were taken up for execution during 1959–60.

(*b*) A statement [a] containing the particulars such as name of the work, amount sanctioned, etc., is placed on the table of the House.

(*c*) In none of these cases has the sanctioned amount been reduced subsequently.

(*d*) Does not arise.

SRI S. M. ANNAMALAI: நான் கேட்டிருக்கக்கூடிய கேள்வி ஜி. ஓ. 640-ன்படி தேசிய அபிவிருத்தி வேலேகளுக்கு முதலில் Block Development Officer அனுமதி தந்து, அதன் பிறகு டெக்னிகல் சாங்க்ஷன் வாங்கலாம் என்று இருக்கிறது. அந்த ஜி. ஓ.-ப்படி சாதாரணமாக ஒவ்வொரு பி.டி.ஓ.-வும் ஏறத்தாழ இரண்டு ஆயிரம் ரூபாய்க்கு சாங்ஷன் செய்தால் ஆயிரம் அல்லது ஐந்நூறு ரூபாய்க்குத் தான் டெக்னிகல் சாங்ஷன் தரப்படுகிறது. அதனல் ஊராட்சி மன்றங் களில் அதிகப்படியான வேலே எடுத்து நடத்துவதற்கு முடியாமல் இருக்கிருர்கள். அப்படி இல்லாமல் B.D.O. சாங்ஷன் செய்த தொகையில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாமல் டெக்னிகல் சாங்ஷன் வாங்கிக்கொள்ளலாம் என்ற அளவில் சர்க்கார் உத்தரவு போடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது இருக்கக் கூடிய விதிகளின்படி எப்படி எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற முறைப்படி அவர்கள் எடுத்துக்கொள்கிருர்கள். மற்றப்படி வேறு விஷயங் களேப்பற்றிய தகவல் என்னிடம் இல்லே. கனம் அங்கத்தினர் சொல்லக் கூடியவைகளே எழுதி அனுப்பினல் அதைப்பற்றி பரிசீலனே செய்யப்படும்.

Groundnut cultivation

*445 Q.—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னே மாகாணத்தில் 1959-60-ல் எத்தனே ஏக்கராக்களிலே வேர்க்கடலே பயிரிடப்பட்டது ?

(ஆ) வெளிநாடுகளுக்கு கடலெண்ணே ஏற்றுமதி செய்வதற்காக எத்தனே பேர்களுக்கு லேசென்ஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

(இ) எத்தனே டன் கடலெண்ணே ஏற்றுமதி செய்யப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The cultivated area under groundnut crop in this State as per the final forecast report for the year 1959–60 was 18,56,100 acres.

(*b*) 120.

(*c*) 11,149 tons (from April 1959 to February 1960).

SRI P. G. MANICKAM: எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள கடலெலெண்ணே ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது ? இவை எந்த எந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது ?

---

[a] Printed as Appendix V on page 117 infra.

5th September 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏற்றுமதி செய்யப் பட்ட நாடுகள், பர்மா, நெதர்லண்ட்ஸ், வெஸ்ட் ஜெர்மனி, இடாலி யூனைடெட் கிங்டம், பெல்ஜியம், பெடரேட் மலேயா, சிங்கப்பூர். ஏற்றுமதி செய்யப்பட்ட எண்ணெயின் மதிப்பு 1,56,72,159 ரூபாய்.

SRI P. G. MANICKAM : கடலெண்ணெ ஏற்றுமதி செய்வதற்கு லைசென்சு பெற்றவர்களில் எத்தனை பேர்கள் வெளியூர்வாசிகள் ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : நான் எற்கனவே குறிப்பிட்டபடி சென்னையிலிருந்துதான் ஏற்றுமதி செய்யப்படவேண்டும். லைசென்சு யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் அவர் களில் யார் இந்த ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

SRI P. G. MANICKAM : இப்படி வெளி நாடுகளுக்கு மணிலா எண்ணெ ஏற்றுமதி செய்யப்படுவதால் அதனால் இங்குள்ள ஏழைகள் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரி யுமா ? அப்படியானால் அது நியாயம் என்று உணருகிறார்களா ? அப்படியானால் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார் கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வெளிநாட்டு வியா பாரத்தை அடியோடு தடைசெய்ய வேண்டுமென்ற உத்தேசம் இல்லை. விலைவாசிகளை உத்தேசித்து அதை பரிசீலனை செய்து எந்த அளவில் வெளிநாட்டு ஏற்றுமதி அனுமதிக்கப்படுமோ அந்த அளவில் அனு மதிக்கப்பட்டு வருகிறது. நமக்கு வெளிநாட்டு ஏற்றுமதி முக்கிய மானது.

SRI A. GOVINDASAMY: மணிலா உற்பத்தியைப்பெருக்க, அதனுடைய உற்பத்தி பெருகுவதற்கு மார்க்கெட்டிங் கமிட்டி மூலமாக பொறுக்கு விதைகளை வழங்குவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத் திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

Construction of Roads in North Arcot district

* 446 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் சமுதாயநலத் திட்டத்தைச் சேர்ந்த கிடாம்பாளையம், வேளாணந்தல், மட்டவெட்டு, குப்பம் கிராமங் களுக்கு ரோடுகள் போடுவதைக் குறித்து பொது மக்களிடமிருந்து மகசர் கள் வந்தனவா ?

(ஆ) அப்படியானால், அவைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No, Sir.

(b) Does not arise.

SRI S. M. ANNAMALAI : இந்த இரண்டு கிராமங்களுக்கு மகஜர் அனுப்பி அவைகளுக்கு ரசீதும் வந்திருக்கிறது. அப்படி வந்த ரசீதுகளில் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக் கிறது. அப்படி இருக்கும்போது கனம் அமைச்சர் அவர்கள் மகஜர் வர வில்லை என்று சொல்லுகிறார்கள். இன்னும் சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மகஜர் கொடுத்து ரொம்ப நாட்க ளாகிறது. இந்த நான்கு கிராமங்களுக்கும் ரோடு வசதியே கிடையாது. அதற்குக் காரணம் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டுமானால் நிலத்தை